# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO. 69/2025

Deposition of Additional Witness Pw2 Dt. 07.07.2026

| | |
|---|---|
| Name | வெங்கடேஷ் |
| Father Name | மணிசேகர் |
| Calling | மணல்மேடு காவல் நிலையம் உதவி ஆய்வாளர். |
| Age | 27/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day07.07.26.

**முதல் விசாரணை**

நான் தற்போது மணல்மேடு காவல் நிலையம் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு முன் பணியிலிருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் கலியபெருமாள் என்பவரை எனக்கு நன்கு தெரியும், அவர்களுடைய கையெழுத்தும் கையொப்பமும் நன்கு பரீட்சையம், வழக்கு கோப்புகளின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து மனு அனுமதி பெற்று அதனடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 11.10.2024 ம் தேதி மணல்மேடு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் இளங்கோவன் நிலைய பொருப்பில் இருந்த போது மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த வெண்ணிலா த/பெ வேலுச்சாமி என்பவரிடன் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து மணல்மேடு காவல் நிலைய குற்ற எண் 284/2024 ச/பி 296(b),118(1),351(3) BNS கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். (**அது அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் மனு அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

மேற்படி வழக்கு கோப்புகளை உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார். உதவி ஆய்வாளர் வழக்கு கோப்புகளை அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை வேலுமணி, தினேஸ்குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**அவை முறையே அ.த.சா.ஆ 5,6 ஆகும்.)** சம்பவ சாட்சிகள் கண்ணுற்ற சாட்சிகள் மகசர் சாட்சிகள் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் உண்மை என தெரியவந்ததன் பேரில் எதிரியை தேடிச் சென்று எதிரி மண்ணிபள்ளம் பேருந்து நிறுத்தம் அருகே நின்று கொண்டிருந்த எதிரியை கைது செய்து அதன் பிறகு நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனைக்கு பிறகு பாராவசம் ஒப்படைக்கப்பட்டது. 11.10.2024 ஆம் தேதி இவ்வழக்கின் எதிரிக்கு அடைப்புக் காவல் நீதிமன்றத்திற்கு அனுப்பட்டது.

இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் முகமது ஜாபர் உலா என்பவரை விசாரணை செய்து காய்ச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். (**விபத்து பதிவேட்டுடன் கூடிய காய்ச்சான்று அ.த.சா.ஆ 7 ஆக**

குறியிடு செய்யப்படுகிறது. ) சாட்சிகள் வெண்ணிலா, துர்கா, அஞ்சுகம், கற்பகம் தலைமை காவலர் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிறகு அவரது வழக்கு விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக 25.11.2024 ம் தேதி ச/பி 296(b),118(1),351(3) BNS ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கின் விசாரணை அதிகாரி நீங்கள் இல்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரிதான். பார்வை மகசர், மாதிரி வரைபடம் மற்ற ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு ஏதுவாக காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரி சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடம் சென்று சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

07/07/26

7/7/25